செ.வெ.எண்: 52 / மார்ச் / 2019 நாள்:19.03.2019

**திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019 நடைபெறவுள்ளதையொட்டி வேட்பாளர்களுடைய செலவு கணக்குகளை கணக்கிட்டு தணிக்கை அறிக்கை சமர்பிக்கும் பொருட்டு தேர்தல் செலவின பார்வையாளர்கள் (Election Expenditure Observers) இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டது.**

**தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

------------------

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற பொதுத்தேர்தல் -2019 ஏப்ரல்-18 அன்று நடைபெறவுள்ளது. திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுடைய செலவு கணக்குகளை ஆய்வு செய்து, இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க இந்திய தேர்தல் ஆணைய அறிவிக்கை எண். 464/OBS/2019/OPS – ன் படி 2 (இரண்டு) தேர்தல் செலவின பார்வையாளர்கள் (Election Expenditure Observers) நியமனம் செய்யப்பட்டு, இன்று (19-03-2019) திருச்சிராப்பள்ளிக்கு வருகை புரிந்து திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகை பி பிளாக்கில் தங்கியுள்ளர் என்ற விவரத்தினை தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

1) திரு. அனூப் குமார் வெர்மா, CBEC IRS – கைபேசி எண் - 93852 85664
2) திரு. சுதன்சு S. கௌதம், CBDT IRS – கைபேசி எண் - 93852 85658

தேர்தல் செலவின பார்வையாளர் வரிசை எண் 2-ல் கண்டுள்ள சுதன்சு S. கௌதம் அவர்கள் திருச்சிராப்பள்ளி பாராளுமன்றத்திற்கு உட்பட்ட 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி, 140 திருச்சிராப்பள்ளி (மேற்கு) சட்டமன்ற தொகுதி மற்றும் 141 திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் செலவின பார்வையாளராகவும் திரு. அனூப் குமார் வெர்மா 142 திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி, 178 கந்தர்வக்கோட்டை(தனி) சட்டமன்ற தொகுதி, 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக வேட்பாளர்களால் மேற்கொள்ளப்படும் செலவு கணக்குகளை தணிக்கை செய்து தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளார்கள் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு:**

19/3/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**

19.3.19